# ஊடக அறிவிப்பு

2008-09-15

Visit our web site
www.tisrilanka.org

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
Building a Nation of integrity

28/1, Bullers Lane, Colombo 07
Tel/Fax: 0112-501474, 0112-592287
Email: tisl@sltnet.lk
Web: http://www.tisrilanka.org

அரசாங்க பிரதம கொரடா வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை ஆராய பாராளுமன்ற குழுவொன்றை நியமிக்க கூறியமை பற்றியதான ஊடக அறிவிப்பு இணைக்கப்பட்டுள்ளது.

விரைவான வெளியீடு பாராட்டத்தக்கது.

J C வெலியமுன

நிறைவேற்றுப் பணிப்பாளர்

---

## TISL, அரசாங்க பிரதம கொரடாவின் முன்னெடுத்தல் நடவடிக்கையை வரவேற்கிறது.

டிறான்ஸ்பறன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (**TISL**) ஆனது பிரதம கொரடா அமைச்சர் தினேஷ் குணவர்தனா "பாராளுமன்றம், வரவு செலவு திட்ட மதிப்பீட்டு தயாரிப்பிலும் அதன் நோக்க வரைவுகளிலும் செயற்றினனோடு பங்குபற்ற வேண்டும்" என்று கூறிய கூற்றை மிகவும் வரவேற்கிறது. **TISL** ன் கருத்தின் படி தேசிய வரவுசெலவுத் திட்ட செயன்முறையை மிகவும் பொறுப்புடையதாக்குதலை உறுதிப்படுத்த இத்தகைய நடவடிக்கை மிகவும் பலன் வாய்ந்ததாக அமையும்.

**TISL** ன் நிறைவேற்றுப் பணிப்பாளர் **J.C.** வெலியமுன கருத்து கூறுகையில், "இலங்கையின் வரவுசெலவுத்திட்ட செயன்முறையானது உள்ளடக்கத்திலும் செயன்முறையிலும் இரகசியதன்மையோடு கூடிய விளக்கப்படமுடியாத பலவீனங்களால் பாதிக்கப்பட்டுள்ளது. **TISL** ஆனது வரவு செலவு திட்ட செயன்முறையை ஒளிவுமறைவு அற்றதாக்குமாறு பல சந்தர்ப்பங்களில் எடுத்துக்காட்டியுள்ளது என்பதோடு இதனால் வினைத்திறனும் வகைகூறக்கூடிய தன்மையும் இயல்பாகவே அதிகரிக்கும் என்பதால் இலங்கைப் பாராளுமன்றத்தில் வலுவானதொரு வரவு செலவுத் திட்ட குழு உருவாகும்" என்கிறார்.

அநேக நாடுகளில் பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை ஆராயவும் குறிப்பாக புறவயத்தன்மையை பரீட்சிக்கவும் என தனியான ஒரு வரவு செலவுத்திட்ட குழு அல்லது நிதி குழுவின் தேவை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் பிரதம கொரடாவின் முன்னிலையிலான இந்நடவடிக்கைக்கு அனைத்து கட்சிகளும் ஆதரவளிக்குமாறும் தாமதமின்றி அனைத்து கட்சிகளும் உள்ளடங்களான வரவு செலவு திட்ட குழுவை நிறுவுமாறும் **TISL** கூறி நிற்கிறது.

மக்கள் விடுதலை முண்ணனி பாராளுமன்ற குழுத்தலைவர் அநுரகுமார திசாநாயக்க கூறிய கருத்துகளுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் குணவர்தன, பொதுமக்கள் நிதி தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டென்றும் அவை பிரயோகிக்கப்படவேண்டும் என்றும் கூறினார். எதிர்க்கட்சி பிரதம கொரடா ஜோசப் மைக்கல் பெரேரா அரசாங்கத்தின முன்வைப்பை தம் கட்சி ஏற்றுக்கொள்வதாகவும் கூறியமை குறிப்பிடத்தக்கது. இவ்விடயம் அடுத்த கட்சித்தலைவர் கூட்டத்தின் போது கவனத்திற் எடுக்கப்படவேண்டும்.